(2) (பேரவையிலிருந்து செய்திகள்

MR. CHAIRMAN : I have also received a message from the Hon. Speaker transmitting a copy of the Tamil Nadu Additional Assessment and Additional Water Cess (Second Amendment) Bill, 1972, as passed by the Legislative Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution.

I have also received messages from the Hon. Speaker transmitting the following Bills, as passed by the Assembly and signed by him for the concurrence of the Council :

1. The Tamil Nadu Additional Assessment and Additional Water Cess (Amendment) Bill, 1972.

2. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1972.

3. The Tamil Nadu Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Extension to Kanyakumari District) Bill, 1972.

(3) மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மதுரைப் பல்கலைக் கழகப் பேரவையில் அங்கம் வகித்து வந்த திருவாளர்கள் வே. தங்கப் பாண்டியன், என். வில்சன் அப்பொல்லாஸ் ஆகியோருடைய பதவிக் காலம் முடிவுற்றதால் ஏற்பட்ட காலியிடங்களுக்கு திருவாளர்கள் டி. சந்தோஷம், எஸ். டி. ஆதித்தன் ஆகியோர் மட்டுமே போட்டியிட்டதால் அவர்களிருவரும் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு முறையாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கிறேன்.

(4) சட்ட மன்ற விவாதங்களை அச்சிடுதல்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விவாதங்களின் இறுதிப்படிகள், கடந்த கூட்டத்தொடர் இறுதி வரைக்கும் அச்சிட்டு, வெளியிடப்பட்டு, மேலவை உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்பதை இந்த மேலவையில் அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி கொள்ளுகிறேன். கடந்த பதினைந்து ஆண்டுகளாக இதை நம்மால் சாதிக்க முடியவில்லை. எழுதுபொருள்—அச்சுத் துறைக்குப் பொறுப்பு வகிக்கிற